சார்பு நீதிமன்றம், பெருந்துறை
**OS** 236/2022

2025-ம் ஆண்டு அக்டோபர் மாதம் 06ம் நாள் Pw2 தரப்பு சாட்சியின் வாக்குமூலம் 1969-ம் ஆண்டு 44வது சட்டம் பிரிவு 6(2)ன் படி திரு.அஷ்பக் அகமது, பி.ஏ.,பி.எல்., சார்பு நீதிபதி அவர்களால் ஆணையிட்டு பிரமாணம் செய்யப்படுகிறது.

நாள் 06.10.2025

Pw2 (கோவிந்தசாமி)

குறுக்கு விசாரணை ( பிரதிவாதி தரப்பில்)

சாட்சியம் அளிக்க வாதி அழைத்து வந்தார். அவர் தயாரித்த முதல் விசாரணை வாக்குமூலத்தில் நான் கையொப்பம் செய்து நீதிமன்றத்தில் முன்னிலைபடுத்தியுள்ளேன் என்றால் சரி. வாதி எனக்கு 10 ஆண்டுகளாக பழக்கம். எனக்கும் வாதிக்கும் வரவு செலவு உள்ளது. நான் வாதியிடம் கடன் வாங்கி கொடுத்துளளேன். நான் கடனுறுதி சீட்டின் அடிப்படையில் வாதியிடம் கடன் பெற்றுள்ளேன். நான் வாதியிடம் பெற்ற கடனிற்கு எழுதி கொடுத்த கடனுறுதி சீட்டை வினோத் குமார் என்பவர் எழுதினார். நான் வாங்கிய கடனிற்கு ஏற்பட்ட கடனுறுதி சீட்டில் யார் சாட்சி கையொப்பம் செய்தார்கள் என்று எனக்கு தெரியாது. நான் வாதிக்கு ஒரு முறை தான் கடனுறுதி சீட்டு எழுதி கொடுத்துள்ளேன். எத்தனை ஆவணங்களில் நான் சாட்சி போட்டுள்ளேன் என்றால் ஒரே ஒரு முறை தான் தாவா கடனுறுதி சீட்டில் சாட்சி போட்டுள்ளேன். சாட்சிக்காக என்னை அழைத்தார்கள், நான் சாட்சி கையொப்பம் செய்தேன். கடன் வாங்கியவர் தான் பிரதிவாதி. பிரதிவாதியை எனக்கு முன்பின் தெரியாது என்றால் சரியல்ல, அவர் எனக்கு தெரிந்தவர் தான். என் ஊருக்கு அருகில் உள்ளார். நான் பணம் கொடுத்த தேதியில் பிரதிவாதியை பார்த்துள்ளேன், நீதிமன்றத்திலும் பார்த்துள்ளேன். வினோத் குமார் எனக்கு 5-6 ஆண்டுகளாக பழக்கம். கடனுறுதி சீட்டில் வாதி கையொப்பம் செய்யவில்லை. கடனுறுதி சீட்டில் நான் கையொப்பம் செய்த தேதி தான் எனக்கு தெரியும். நான் சாட்சி கையொப்பம் செய்த போது கடனுறுதி சீட்டில் ஒட்டப்பட்டிருந்த வருவாய் வில்லையில் கையெபப்பம் இருந்ததா என்றால் பிரதிவாதி என் முன்னால் தான் கடனுறுதி சீட்டில் கையொப்பம் செய்தார். கடனுறுதி சீட்டு எழுதுவதற்கு ஒரே பேனா பயன்படுத்தப்பட்டதா என்றால் ஆமாம், நான் எனது பேனாவில் கையொப்பம் செய்தேன். பிரதிவாதி கடனுறுதி சீட்டு எழுதிய பேனாவில் கையொபப்பம் செய்தார், அது யாருடைய பேனா என்று

பார்க்கவில்லை. நான் கையொப்பம் செய்த ஆவணம் முத்திரை தாளா என்றால் இல்லை, கடனுறுதி சீட்டு. கடனுறுதி சீட்டு தமிழரசன் வீட்டில் தான் எழுதப்பட்டது. கடனுறுதி சீட்டை யார் வாங்கி வந்தார்கள் என்று தெரியாது. கடனுறுதி சீட்டின் பின் பக்கத்தில் யார் கையொப்பம் செய்தார்கள் என்று தெரியாது. கடனுறுதி சீட்டின் பின் பக்கத்தில் ரேகை வைத்தார்களா என்று தெரியாது. தமிழ் தேதி , கிழமை எழுதப்பட்டதா என்றால் எனக்கு தெரியாது. கடனுறுதி சீட்டில் அடித்தல் திருத்தல் இல்லை. பிரதிவாதி தமிழில் கையொப்பம் செய்தார். பிரதிவாதியின் விலாசத்தை அவரே பூர்த்தி செய்தாரா என்றால அது பற்றி எனக்கு தெரியாது. பிரதிவாதியின் இடது கை பெருவிரல் ரேகை என்பதை வினோத் குமார் தான் எழுதினார். நான், வினோத்குமார், வாதி ஆகியோர் நெருங்கிய உறவினர்கள் என்றால் சரியல்ல. நான் ஏற்கனவே தமிழரசனிடம் கடன் பெற்ற நபர் என்பதால் வாதி தயார் செய்த மோசடி ஆவணத்திற்கு எற்ப பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் 10 ஆண்டுகளுக்கு முன்பு வாதியிடம் கடன் பெற்றேன். தேதி ஞாபகமில்லை. கடனுறுதி சீட்டு எழுதிய தேதி ஞாபகமுள்ளது. என் தந்தையின் பிறந்த தேதி, தாயாரின் பிறந்த தேதி, என் பெற்றோரின் திருமண நாள் ஆகியவை எனக்கு தெரியாது. அதைவிட இது முக்கியம் என்பதால் ஞாபகம் உள்ளது. என் முன்னிலையில் பிரதவாதி வாதியிடம் கடன் பெறவில்லை என்றும், கடனுறுதி சீட்டு எழுதி கொடுக்கவில்லை என்றும் நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

மறு விசாரணை இல்லை.

Dictated by me in Open court typed by Typist and read over to the witness and acknowledge by him/her to be correct.

M ASHFAQ AHAMED

Digitally signed by M ASHFAQ AHAMED
Date: 2025.10.06 18:44:00 +0800

Subordinate Judge,
Perundurai.

uploaded by SS